செ.வெ.எண்: 444/2020 நாள்: 16.11.2020

**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவராக**
**திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள்**
**பொறுப்பேற்றுக் கொண்டு அலுவலக பணிகள் மேற்கொண்டார்...**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவராக திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள் 15.11.2020 அன்று பிற்பகல் பொறுப்பேற்றுக் கொண்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று 16.11.2020 தனது பணிகளை மேற்கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் 'மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியராக நேற்று 15.11.2020 மாலை பெறுப்பேற்றுக் கொண்டேன். கடந்த 2½ ஆண்டுகளாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக பணியாற்றி உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழக அரசின் திட்டங்கள் சிறப்பாக எடுத்துச் செல்வதற்கான முழு முயற்சி எடுக்கப்படும். அடுத்து 1-2 மாதங்களில் மாவட்டத்தின் முக்கிய விஷயங்கள், இடங்கள், அரசு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுரர் திருக்கோயில் தீபத் திருவிழா தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு செயல்முறை (Standard Operation Procedure) அடிப்படையில் சிறப்பாக நடத்தப்படும். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கொரோனா நடைமுறைகள் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிவது ஆகியவை பொது மக்கள் கடைபிடிக்க வேண்டும். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவல் குறைந்து வருகிறது, அதனை மீண்டும் பெருகாமல் இருக்க தொடர்ந்து கண்காணிக்கப்படும். திருவண்ணாமலை மாவட்டத்தை மேம்படுத்துவற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். வடகிழக்கு பருவ மழை காலங்களில் குப்பைகள் அகற்ற, கால்வாய் தூர்வார, தண்ணீர் தேங்காமல் இருக்க நடடிவக்கை எடுக்கப்படும். பொது மக்கள் கோரிக்கை தொடர்பாக எப்போது வேண்டுமானாலும் என்னை சந்திக்கலாம்' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**